07.06.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா. 7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜாபர் | | |
| த/பெ | அப்துல்ஜபார் | | |
| கிராமம் | தியாகதுருவம் | தொழில் | |
| தாலுக்கா | கள்ளக்குறிச்சி | வயது | 51/2024 |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** திருநாவலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன அப்துல் ஜபார் என் தந்தை ஆவார். அ.சா.1 என் பெரியப்பா. அ.சா.2 முதல் 6 வரை எனக்கு நன்கு தெரியும். ஆஜர் எதிரிகளில் எனக்கு 1,2 எதிரிகளை தெரியும். 27.06.2018ம் தேதி உளுந்தூர் பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக நான் பணி செய்து கொண்டிருந்தபோது அன்று மாலை சுமார்6.30 மணிக்கு என் தாயார் சாபிராபீ தொலைபேசி மூலம் டிஎடப்பாளையம் கிராமத்தில் உள்ள எங்கள் நிலத்தில் உள்ள வீட்டில் என் அப்பா இரத்த வெள்ளத்தில் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக தகவல் தெரிவித்தார். நான் புறப்பட்டு சம்பவ இடத்திற்கு இரவு சுமார் 8.30 மணி அளவில் சென்று பார்த்தபோது வீட்டில் எனது தகப்பனார் வீட்டில் உள்ளே தென்கிழக்காக வெட்டு காயங்களுடன் தலைகுப்புற இரத்த வெள்ளத்தில் தலை மற்றும் காது, கழுத்து, வலதுகை முட்டி ஆகிய இடங்களில் வெட்டு காயங்களுடன் கிடந்தார். என் பெரியப்பா சம்சுதின் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுசம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை defer செய்ய மனுதாக்கல் செய்து அது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.